இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 299 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 26 – வெள்ளிக்கிழமை 09 ஜூன் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 299 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 26 - Friday 09 June 2023 - Madurai 16 Pages ₹ 5.00



சென்னை புளியந்தோப்பு, பின்னி மில் மைதானத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நீர்வளத் துறை அமைச்சரும், கழக பொதுச் செயலாளருமான துரைமுருகன், கழக பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர், தொல். திருமாவளவன் எம்.பி., மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன் எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் தேர்தல்!

# அனைவரும் ஒன்றிணைவோம்! வெற்றி பெறுவோம்!

## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!

**சென்னை, ஜூன் 9-**

**சென்னை கிழக்கு மாவட்டம் பெரம்பூர் பின்னி மில் மைதானத்தில் நடைபெற்ற தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவில் முதல்வரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது" நாடாளுமன்றத் தேர்தல் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் தேர்தல்" என்றும் "இத்தேர்தலில் அனைவரும் ஒன்றிணைவோம்! வெற்றி பெறுவோம்" எனவும் அறை கூவல் விடுத்தார்.**

நேற்று முன்தினம் (7-6-2023) மாலை, சென்னை புளியந்தோப்பு பின்னி மில் மைதானத்தில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டுத் தொடக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை இந்த ஆண்டு ஜூன் 3ஆம் தேதி கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால், ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட இரயில் விபத்து காரணமாக ஜூன் 3ஆம் தேதி நடைபெறவிருந்த இந்த நிகழ்ச்சியை ஒத்திவைக்க நேர்ந்தது. அன்று நடைபெறுவதாக இருந்த அத்தனை நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டன. அதனைத்தான் மனிதநேய மாண்பாளரான தலைவர் கலைஞர் அவர்களும் விரும்பியிருப்பார்.

### எங்கும் நிறைந்திருந்து கண்காணிக்கிறார்!

தலைவர் கலைஞரைக் கொண்டாட வேண்டியது, அவரது புகழைப் பரப்ப வேண்டியது நம்முடைய கடமை. அதனால்தான் நாம் இன்று தொடங்கி அடுத்த ஆண்டு ஜூன் 3ஆம் தேதி வரை கொண்டாட இருக்கிறோம்.

95 வயது வரை வாழ்ந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், இன்னும் கூடுதலாக ஐந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்தால், இதே மேடையில் விழா நாயகராக நடுநாயகமாக அவரே அமர்ந்திருப்பார். முதுமையின் காரணமாக அவர் உடல் நலிவுற்றார். நம்மை விட்டுப் பிரிந்தார். பிரிந்தார் என்று சொல்வதை விட, நான் அடிக்கடி சொல்லி வருவதைப் போல எங்கும் நிறைந்திருந்து, தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை கண்காணித்துக் கொண்டு இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும் எந்த திட்டங்களைத் தீட்டினாலும் எந்த விழாக்களில் பங்கெடுத்தாலும் எந்த நிலைப்பாடுகளை எடுத்தாலும் தலைவர் கலைஞர் அவர்கள் எங்கும் நிறைந்திருந்து கண்காணிக்கிறார் என்ற எண்ணத்தோடுதான் நான் நாள்தோறும் அவரது நினைவுகளைத் தாங்கி இருக்கிறேன். அந்த நினைவுகளின் காரணமாகத்தான் அண்ணனின் அருகில் அவர் துயில் கொண்டிருக்கும் கடற்கரைக்கு அடிக்கடி சென்று அவரது நினைவகத்தை வலம் வந்து கொண்டு இருக்கிறேன்.

இந்த மேடையில் தலைவர் கலைஞர் அவர்களும் அமர்ந்திருப்பதாகவே நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். நம்மைப் பொறுத்தவரையில் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் நம்மை நாள்தோறும் இயக்கும் உணர்வுகள்!

### எப்போதும் உடன்பிறப்புகளுக்கிடையே தான் கலைஞர் இருக்கிறார்!

அந்த உணர்வுகள்தான், அவர்களது மறைவுக்குப் பிறகும் நமக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கின்றன! அந்த வகையில், எங்களின் உணர்வே! எங்களின் உயிரே! எங்களின் எழுச்சியே! எங்களின் வழிகாட்டியே! எங்களின் கலங்கரை விளக்கமே! எங்களின் உதயசூரியனே! தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களே! உங்களின் 100ஆவது பிறந்தநாளை நாங்கள் கொண்டாடத் தொடங்குகிறோம்!

தலைவர் கலைஞர் அவர்களே! நீங்கள் எப்போதும் உடன்பிறப்புகளுக்கிடையே தான் இருப்பீர்கள்! இதோ, உங்களது உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளுக்கிடையேதான் இந்த விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்களே! நீங்கள் எப்போதும் கழகத்தின் பொதுச்செயலாளர், பொருளாளர், முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் என அனைவரும் சூழ்ந்திருக்கத்தான் உங்களது பிறந்தநாளை நீங்கள் கொண்டாடுவது வழக்கம்! இதோ, உங்களது கழகத் தளகர்த்தர்களுக்கிடையே நூற்றாண்டு விழாவை நாங்கள் தொடங்குகிறோம்!

தலைவர் கலைஞர் அவர்களே! நீங்கள் எப்போதும் தோழமைக் கட்சித் தலைவர்களைத் தோளோடு தோள் சேர்த்துக் கொண்டுதான் வலம் வருவீர்கள்! இதோ இந்த மேடையில் நம்முடைய மானமிகு ஆசிரியர் அய்யா உள்ளிட்ட தோழமை இயக்கங்களின் தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டுதான் உங்களது நூற்றாண்டு விழாவை நாங்கள் இன்றைக்கு தொடங்குகிறோம்!

### கழகம் தொடங்கிய வடசென்னையில் கலைஞரின் நூற்றாண்டு விழா!

தலைவர் கலைஞர் அவர்களே! 1949ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் நாள் கொட்டும் மழையில் ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதே, அதே, வடசென்னையில் உங்களது நூற்றாண்டு விழா தொடங்குகிறது!

தலைவர் கலைஞர் அவர்களே! கழகத்துக்கு என அறிவகம் உருவானதே, அதே, வடசென்னையில்தான் உங்களது நூற்றாண்டு விழா தொடங்குகிறது!

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் தலைவரான முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை இன்றைக்கு நாம் எடுக்கிறோம் என்று சொன்னால் தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களும் பொருத்தமானவைதான் என்றாலும் கழகம் தோன்றிய வடசென்னைப் பகுதியில் நாம் இந்த நூற்றாண்டு விழாவைத் தொடங்குவது மிக மிக சிறப்பானது.

### விழாவை மிகப் பிரமாண்டமாக நடத்திய "செயல்பாபு"!

75 ஆண்டுகளுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு விதை போட்ட பகுதியில் கொள்கை வேர் பரப்பி ஆல் போல் தழைத்து இருக்கும் இந்த இயக்கத்தை வளர்த்துக் காட்டிய தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை சிறப்போடு, நான் எதிர்பார்த்ததை விட மிகப் பிரமாண்டமானதாக நடத்திக் காட்டி இருக்கிறார் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் 'செயல் பாபு' என்று என்னால் எப்போதும் அழைக்கப்படும் அமைச்சர் சேகர் பாபு அவர்கள். அவருக்குத் தோளோடு தோள் நின்று இந்த மாவட்டத்திலே, பகுதியிலே, வட்டத்திலே விழா சிறக்க பணியாற்றி வரும் கிழக்கு மாவட்டச் செயல்வீரர்கள் அனைவருக்கும் தலைமைக் கழகத்தின் சார்பிலும் – என்னுடைய தனிப்பட்ட முறையிலும் – இதயப்பூர்வமான நன்றியையும் பாராட்டுதல்களையும் நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஓராண்டு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை – அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாட இருக்கிறோம். இந்தக் கொண்டாட்டங்களின் மூலமாக தலைவர் கலைஞருக்கு இதுவரை கிடைக்காத புதிய புகழைச் சேர்க்கப் போகிறோம் என்பதல்ல; நாம் நம் நன்றியின் அடையாளமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்! "நான் சீமான் வீட்டுப் பிள்ளை அல்ல, சாமானியர் வீட்டுப் பிள்ளை" என்று சொன்னவர் கலைஞர்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## சென்னையில் ஆக. 7 அன்று கலைஞர் நினைவகம் திறப்பு!